**தமிழ்நாட்டில் அ.தி.மு.க.வை முற்றிலுமாக அழித்துவிட்டதுபா.ஜ.க.! பா.ஜ.க. – ஆர்.எஸ்.எஸ். சேர்ந்து தமிழ்நாடு, தமிழ்மொழி மீது தாக்குதல் நடத்துகின்றது!**

# பா.ஜ.க.வின் சதித்திட்டத்தை நாடாளுமன்றத்தில் முறியடித்துள்ளோம்!

## பொன்னேரியில் நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்தில் ராகுல்காந்தி கடும் தாக்கு!

திருவள்ளூர், ஏப்.20-


திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி தேர்தல் பொதுக்கூட்டத்தில் ராகுல் காந்தி பங்கேற்று பேசியதாவது:-

தமிழ்நாட்டு மக்களோடு எனவு உறவு மேம்பட்டு இருக்கிறது .

எனது இதயத்தில் தமிழ்நாட்டு மக்களுக்கு தனி இடம் உள்ளது.

நாடாளுமன்றத்தில் தமிழ்நாட்டின் பிரதிநிதித்து வத்தை குறைக்க வேண்டும் என்பதுதான் பாஜகவின் முக்கிய நோக்கமாக உள்ளது. பாஜகவின் சதித்திட்டத்தை நாடாளுமன்றத்தில் நேற்று முறியடித்து ள்ளோம் .

பாஜகவின் தொகுதி மறுவரையறை மசோதாவை எதிர்க்கட்சியினர் ஒன்றிணைந்து முறியடித்தோம். மகளிர் இடஒதுக்கீடு என்ற பெயரில் தொகுதி மறுவரையறை மசோதாவை தாக்கல் செய்தனர்.



பாஜகவும், ஆர்எஸ்எஸ் அமைப்பும் இந்தியாவின் பன்முகத்தன்மையை சீர்குலைக்க முயற்சிக்கின்றன. தமிழ் மொழி, தமிழர்களின் கலாச்சாரம், தமிழின் வரலாற்றை பாஜகவினர் அழிக்க முயற்சிக்கின்றனர்.

தமிழ்நாட்டை டெல்லியிலிருந்து ஆள வேண்டும் என்பதுதான் பாஜகவின் நோக்கம் ; அதற்கு ஒருபோதும் இடம்கொடுக்கக் கூடாது

பாஜகவும், ஆர்.எஸ்.எஸ். அமைப்பும் தமிழினத்திற்கு எதிரானவர்கள்.

பாஜகஆர்எஸ்எஸ் சதித்திட்டங்களை திமுகவும், கூட்டணிக் கட்சிகளும் முறியடித்து வருகின்றன.

சட்டமன்றத் தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக் குக் கூட்டணி வேட்பாளர்கள் அனைவரும் வெற்றி பெற வேண்டும்.

மோடி, அமித்ஷா உத்தரவை செயல்படுத்தும் ஒருவரை தமிழ்நாட்டின் முதலமைச்சராக்க பாஜக நினைக்கிறது.

தமிழ்நாட்டின் எதிர்காலத்தை டெல்லிதான் தீர்மானிக்கவேண்டும் என்று பிரதமர் மோடி விரும்புகிறார்.

தமிழர்கள் யார் என்பதை பாஜக புரிந்து கொள்ளவில்லை.

டிரம்பிடம் மோடி சரண்டைந்தது போல், டெல்லியிடம் சரணடையும் முதலமைச்சர் வேண்டும் என்று பாஜக விரும்புகிறது.

தமிழ்நாட்டில் அ.தி.மு.க.வை முற்றிலுமாக அழித்து விட்டது பா.ஜ.க.

தற்போதுள்ள அ.தி.முக. என்பது பாஜகவின் முகமூடி.

சமூகநீதி கொள்கைகள் மற்றும் பெரியாரின் சித்தாந்தங்களை பாஜக அழிக்க முயற்சிக்கிறது.

இவ்வாறு ராகுல் காந்தி பேசுகையில் குறிப்பிட்டார்.

## தொகுதி மறுவரையறை: பெரிய வெற்றி தமிழ்நாட்டுக்கு!

## பெருந்தோல்வி ஒன்றிய அரசுக்கு! ஏன்? எப்படி?

### சென்னை சிந்தனையாளர் மன்றம் சார்பில் கருத்தரங்கம்!

### ஆ.இராசா எம்.பி. – இந்து என்.ராம் கருத்துரை!

சென்னை, ஏப்.20-

சென்னை சிந்தனையாளர் மன்றம் சார்பில் மாபெரும் கருத்தரங்கம் இன்று (20.4.2026- திங்கள் கிழமை) மாலை 6 மணியளவில் ஆர்.ஏ.புரம், முத்தமிழ்ப் பேரவை, திருவாவடுதுறை இராஜரத்தினம் கலையரங்கத்தில் நடைபெறுகிறது.

"தொகுதி மறுவரையறை பெரிய வெற்றி தமிழ்நாட்டுக்கு! பெருந் தோல்வி ஒன்றிய அரசுக்கு ஏன்? எப்படி?" எனும் தலைப்பில் நடைபெறும் இக்கருத்தரங்கத்திற்கு முத்தமிழ்ப் பேரவைத் துணைத் தலைவர் குணாநிதி அமிர்தம் வரவேற்புரையாற்றுகிறார்!

சென்னை சிந்தனையாளர் மன்றம் ஒருங்கிணைப்பாளர் விஜயா தாயன்பன் தலைமை வகிக்கிறார்.

இக்கருத்தரங்கில் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., 'தி இந்து' குழும இயக்குநர் 'இந்து' என். ராம் ஆகியோர் கருத்துரை வழங்குகின்றனர்.

இதில் கழக முன்னணியினர், திராவிட இன உணர்வாளர்கள், கழகத் தோழர்கள், சென்னை சிந்தனையாளர்கள் மன்றத்தினர் பங்கேற்றுச் சிறப்பிக்கின்றனர்.

---

**நாடாளுமன்றத் தோல்வி பா.ஜ.க.வுக்கு இனி தொடரும்!**

# தமிழ்நாட்டு உரிமைகளை எப்போதும் நமது முதலமைச்சர் விட்டுக்கொடுக்க மாட்டார் - இது கொள்கைக் கூட்டணி!

## கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. பரப்புரை!

கடலூர், ஏப்.20-

**கடலூர் மாவட்டம் விருத்தாசலம் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் மதச்சார்பற்ற ஜனநாயக முற்போக்குக் கூட்டணி வேட்பாளர் தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த், பண்ருட்டி தொகுதி தி.மு.க. வேட்பாளர் சபா. இராஜேந்திரன் ஆகியோருக்காக தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி ஏப்ரல் 18 மாலை பரப்புரை செய்தார்.**

அப்போது பேசுகையில்.

"என்னுடைய சகோதரி பிரேமலதா அவர்களுக்கு வாக்கு கேட்டு இன்று முரசு சின்னத்திலே நீங்கள் வாக்களித்து அவரை வெற்றி பெற செய்ய வேண்டும் என்று உங்களை எல்லாம் கேட்டுக் கொள்ள வந்திருக்கிறேன்.





### கேப்டன் வெற்றி பெற்ற தொகுதி!

என்னுடைய மனமகிழ்ந்து இந்த தொகுதியிலே நான் உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கிறேன். கேப்டன் அவர்கள் நின்று வெற்றி பெற்ற இந்த தொகுதியிலே அவருடைய துணைவியார் நம்முடைய பிரேமலதா அவர்கள் நம்முடைய வேட்பாளராக நிறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

உங்கள் அத்தனை பேருக்கும் நம்முடைய சகோதரி பிரேமலதா அவர்களை பற்றி நன்றாகத் தெரியும். எப்பொழுதுமே ஒரு தைரியமாக இருக்கக்கூடிய பெண்மணி.

கேப்டன் எப்படி எது வந்தாலும் எதிர்கொள்ளக்கூடிய ஒரு தலைவராக, எதற்குமே பயப்படாத ஒரு மனிதராக, அதே நேரத்திலே தன் வாழ்நாள் முழுவதும் ஒரு எளிமையான மனிதராக மக்களோடு மக்களாக இருக்கக்கூடிய ஒரு மகத்தான மனிதராக வாழ்ந்தாரோ... அதே தைரியத்தோடு எந்த எந்த கருத்தாக இருந்தாலும் தைரியமாக எடுத்துச் சொல்லக்கூடிய ஒருவர் நம்முடைய சகோதரி பிரேமலதா.

என்னுடைய நீண்ட நாள் தோழி. என் குடும்பத்திலே ஒருவர் என்று நான் சொல்லக்கூடிய ஒரு சகோதரி. அவருக்காக வந்து வாக்குக் கேட்கக்கூடிய இந்த வாய்ப்பு எனக்கு கிடைத்ததை எண்ணி நிச்சயமாக பெரிய மகிழ்ச்சி அடைகிறேன்.

பிரேமலதா அவர்கள் உங்களுக்காக பேசக்கூடியவர். நீங்கள் கூப்பிட்ட குரலுக்கு கேப்டன் அவர்கள் ஓடோடி வந்ததைப் போல உங்களுக்காக ஓடோடி வந்து உங்களுக்கு என்ன தேவை என்பதை நிறைவேற்றி தரக்கூடியவர். நம்முடைய முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள் அவரையும் ஒரு சகோதரியாக கருதக்கூடியவர் . அதனால இனிமேல் உங்க தொகுதிக்கு என்ன வேணும்னாலும் நம்முடைய முதலமைச்சருடைய இன்னொரு சகோதரி இங்கே நிற்கிறார்கள். உங்களுக்கு என்ன வேணும் என்றாலும் அவர்களால் அதை செய்து தருவார்கள். அந்த நம்பிக்கையோடு நீங்கள் அவர்களுக்கு வாக்களிக்க வேண்டும் என்று உங்களை எல்லாம் நான் வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய பிரேமலதா அவர்களே தமிழ்நாடு முழுவதும் போய் எல்லா மக்களையும் சந்தித்து எல்லாருக்காகவும் வாக்கு கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இன்று அவருக்கு வாக்குக் கேட்கக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது.

### வாக்குறுதிகளை நிறைவேற்றிய முதல்வர்!

நம்முடைய முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்களுக்கு நீங்கள் வாக்களிக்க வேண்டும் என்று கேட்கும் போது மக்களுக்கு தந்திருக்கக்கூடிய வாக்குறுதி எல்லாம் நாங்க நிறைவேற்றித் தந்திருக்கிறோம் என்ற அந்தப் பெருமையோடு அந்த உரிமையோடு வந்து உங்களிடம் ஓட்டு கேட்கிறோம்.

ஆனால் மற்றவர்கள் தொடர்ந்து மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். மக்களுக்கு எதிராகவே இருக்கக்கூடிய அவர்கள் தான் எதிரணியிலே ஒரு கூட்டணி அமைத்திருக்கிறார்கள் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

நேற்று நாடாளுமன்றத்தில என்ன நடந்தது என்று நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். முதலமைச்சர் என்ன சொன்னார்? தேர்தல் வேலையெல்லாம் நாங்க பார்த்துக்கொள்கிறோம். நீங்க தமிழ்நாட்டுடைய உரிமையைப் பாதுகாப்பதற்காக அங்க செல்லுங்கள் என அனுப்பி வைத்தார்.

இன்றைக்கு பிரதமர் பேசுவார் என்ன சொல்லுவார்? எதிர்க்கட்சிகள் எல்லாம், பெண்களுக்கு இட ஒதுக்கீடு கொடுக்கலாம்னு இருந்தோம். நாடாளுமன்றத்தில் இட ஒதுக்கீடு, சட்டமன்றத்தில் இட ஒதுக்கீடு கொடுக்கலாம்னு இருந்தோம். எதிர்க்கட்சி எல்லாம் சேர்ந்து அதை நிறுத்திட்டாங்க என சொல்லுவார்கள்.

ஆனால் அதைவிட பெரிய பொய் அவங்க நிறைய பொய் சொல்லுவாங்க. அந்தப் பொய் எல்லாம் கேட்டு கேட்டு தான் இதுக்கு மேல கேட்க முடியாதுன்னு நம்ம சகோதரி அங்கிருந்து விட்டா போதும்னு வெளியில வந்து நம்மோடு கைகோர்த்துக் கொண்டு இந்த மேடையிலே நின்று கொண்டிருக்கிறார்கள்.

நேத்து என்ன நடந்ததுன்னா பெண்களுக்கான மசோதா இட ஒதுக்கீடைக் கொண்டு வர நாடாளுமன்றத்தை கூட்டுகிறோம் என்றார்கள். நாடாளுமன்றத்தில பெண்களுக்கான இட ஒதுக்கீட்டை கொண்டு வரவில்லை. அதோடு எதை சேர்த்து, நம் தொகுதி மறுசீரமைப்பையும் கொண்டு வந்தார்கள். தொகுதி மறுசீரமைப்புனா இந்தத் தொகுதிய மாத்தி இந்த தொகுதியா கொண்டு வரதில்லை.

### ஜனத் தொகையை கட்டுப்படுத்திய தமிழ்நாடு!

தமிழ்நாட்டில இருக்கக்கூடிய தொகுதிகளுடைய எண்ணிக்கையை மத்த மாநிலங்கள்ல இருக்கக்கூடிய தொகுதிகளுடைய எண்ணிக்கையை மாத்துறது. தமிழ்நாட்டுல என்ன நடந்தது? எல்லாருக்கும் இப்ப பொதுவா கேட்டீங்கன்னா வீட்ல எத்தனை குழந்தைன்னா ஒரு குழந்தை ரெண்டு குழந்தைனு சொல்லுவாங்க இல்லையா ? 10, 15 எல்லாம் இப்ப யாரும் சொல்றது இல்ல தமிழ்நாட்டுல. ஏன்னா நம்ம பிள்ளைங்க படிக்கணும். நல்லா இருக்கணும் அப்படிங்கறதுக்காக நம்ம ரெண்டு குழந்தையோட நிறுத்த ஆரம்பிச்சட்டோம்.

ஆனா வட மாநிலங்கள்ல யாரும் அப்படி செய்றது இல்ல. அதனாலதான் இங்க நிறைய பேர் வேலைக்கும் வராங்க. ஏன்னா அங்க வேலை வாய்ப்புகள் இல்லை படிக்கறதுக்கான வாய்ப்புகள் இல்லை. அங்கே ஜனத்தொகை ஜாஸ்தி ஆயிடுச்சு. அதனால அங்க இருக்கக்கூடிய மக்கள் தொகையையும் தமிழ்நாட்டில இருக்கக்கூடிய மக்கள் தொகை கேரளா இருக்கக்கூடிய மக்கள் தொகை எல்லாம் வச்சு கணக்கு பார்த்தா இன்னைக்கு தமிழ்நாட்டுல 39 எம்.பி. இருக்கிறோம். அங்கே 80 எம்.பி.க்கள் இருக்காங்க.

மக்கள் தொகையைக் வைத்து கணக்கு பார்த்தால் நமது எம்பி.க்கள் என்னிக்கை குறையும். 32 எம்.பி. ஆகுதுனு வச்சுக்கோங்க... அவங்களுக்கு இருக்கிற எம்.பி. 80லிருந்து அதிகமாகும். 120 ஆகக் கூட ஆகலாம். அப்படி இருக்கக்கூடிய ஒரு சூழல்ல ஏன் நாம் இதை ஏற்றுக்கொள்ள வேண்டும்?

தமிழ்நாட்டில ஜனத்தொகையை குறைத்தால் நாட்டுக்கு நல்லதுன்னு சொன்னாங்க. நாம் அதை நம்பி குறைச்சோம். நம்ம பிள்ளைங்க நல்லா இருப்பாங்கன்னு குறைச்சோம். அவர்கள் அதை செய்யவில்லை. நல்ல அரசாங்கம் அங்கே இல்லை. அதனால மக்கள் தொகை அதிகமா இருக்கு. மக்கள் கஷ்டப்படுறாங்க. ஆனா அதுக்கு நல்ல அரசாங்கத்தை நடத்தியதுக்கு ஒரு பிள்ளை நல்லா படிச்சா என்ன நல்ல மார்க் கொடுப்பாங்களா? பரீட்சையில நல்லா எழுதி இருந்தா என்ன நல்ல மார்க் தான கொடுக்கணும். இவங்க நல்லா எழுதி இருக்கிற பிள்ளைக்கு பெயில் மார்க் கொடுக்குறாங்க. நமக்கு குறைக்கிறாங்க. நமக்கு தொகுதியை குறைச்சிட்டு சரியா எழுதாத பிள்ளைங்களுக்கு அதிக மார்க் கொடுக்குறாங்க.

### தமிழ்நாடு பாதிக்கப்படும்!

திடீர்னு உள்துறை அமைச்சர் எல்லாருக்கும் ஏத்துவோம் என சொல்கிறார். அப்படி ஏத்தினாலும் தமிழ்நாடு பாதிக்கப்படும். அவங்க எந்த மசோதாவ வேணாலும் கொண்டுவர முடியும். நம்ம என்ன தமிழ்நாட்டில சொல்றோம்னா இருக்கறதுல எங்களுக்கு கொடுங்க.

கண்ணுக்கு முன்னாடி ஒரு பானைல சாப்பாடு இருக்கிறதே... அதை பெண்களுக்கும் கொஞ்சம் பகிர்ந்து கொடுங்கள் என்கிறோம். ஆனால் அவர்களோ நாங்க பெரிய பானையா வைச்சு பொங்கி அதிலிருந்து கொடுக்குறோம் என்றார்கள். ஆனால் அந்தப் பெரிய பானையை கொண்டு வந்து பொங்கினால், நமக்கு அதில் கொஞ்சமா இருக்கும்.

543 இடம் இருக்குல்ல, அதுல பெண்களுக்கு இட ஒதுக்கீடு கொடுங்க. நீங்க இதை பெருசு பண்ணி 850 மாத்தி அதுக்கப்புறம் இட ஒதுக்கீடு கொண்டு வருவது என்பது மக்களை ஏமாற்றுவது.

### தமிழ்நாட்டு உரிமைகள் பறிக்கப்படும்!

நம்முடைய எண்ணிக்கையை குறைத்தால் நம்முடைய உரிமை பறிக்கப்படுமா இல்லையா? நாம் கேட்பதற்குக்கூட ஆளிருக்காது, குடியரசு தலைவர் தேர்தலில் நம்முடைய ஓட்டே வேண்டாம், எங்களுக்கு ஓட்டுப் போடுங்கள் என்று கூட கேட்கமாட்டார்கள். இதுதான் தமிழ்நாட்டு உரிமைகளை பறிப்பது. அதனாலதான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மசோதா கொண்டு வந்த நாளில எல்லாரையும் கருப்பு கொடி ஏத்த சொன்னாங்க.

ஏன்னா தமிழ்நாடு உரிமைகள் பறிக்கப்படுகிறது. நேற்று நம்முன் இந்த நாட்டில் இருக்கக்கூடிய அத்தனை எதிர்க்கட்சிகளும் இணைந்து ஒன்றாக நின்று மோடியுடைய மசோதாவை நாடாளுமன்றத்திலே தோற்கடித்திருக்கிறோம். ஏனென்றால் இது கொள்கைக் கூட்டணி.

அவங்களுக்கு வரப்போற தோல்விகளுடைய முதல் கட்டம் இதுதான். முதல் தோல்வி இல்லையா? இனிமேல தொடர்தோல்விகள்தான் வரப்போகுது. தமிழ்நாட்டில இதுவரைக்கும் வெற்றி வாய்ப்பு இல்லை. இனிமேலயும் இல்லை அதுக்கப்புறம் நாடு முழுவதும் தோல்விதான் தொடரும். தமிழ்நாட்டுக்கு தென்மாநிலங்களுடைய உரிமைகளை பறிக்க நினைத்தவர்களுக்கு நாம் நாடாளுமன்றத்திலே சரியான பாடத்தை சொல்லித் தந்திருக்கிறோம்.

அதுவும் என்ன பெண்களுக்கு இட ஒதுக்கீடு கொடுக்கிறேன் எனச் சொல்லி பெண்களுக்கு பின்னாடி மறைந்து தமிழ்நாட்டுடைய உரிமைகளை பறிக்க நினைத்தார்கள். இரண்டு கண் இருக்கு அதுல ஒரு கண்ணுக்கு கண்ணாடி போடுறேன் இன்னொரு கண்ணை குத்திவிடுகிறேன் என்று சொன்னால் எப்படி ஏற்க முடியும்?

### பா.ஜ.க.விற்கு பாடம் கற்பிப்போம்!

பெண்களுக்கும் இட ஒதுக்கீடு வேணும் தமிழ்நாட்டுக்கும் உரிமை வேணும். அதனால இருக்கறதுல இடம் கொடுன்னு கேட்டோம். கொடுக்கவில்லை. அவர்களுக்கு சரியான பாடத்தை நாம் சொல்லித் தந்திருக்கிறோம். இந்த தேர்தல்லையும் மீண்டும் அவர்களுக்கு நாம் சரியான பாடத்தை சொல்லித் தர வேண்டும் என்று உங்களை எல்லாம் நான் வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

எதிரணியில் இருக்கக்கூடிய எடப்பாடிக்கு தமிழ்நாட்டை பற்றிய கவலையே கிடையாது. அவருக்கு தன்னை காப்பாற்றிக்கொண்டால் போதும். மக்களை பற்றி, தமிழ்நாட்டை பற்றி இங்கே இருக்கக்கூடிய சகோதரிகளைப் பற்றி கவலை இல்லை.

### அடிமையாகவே வாழ தயாராகிவிட்டார் பழனிசாமி!

பதவிக்காக அவர்களுக்கு அடிமையாகவே வாழ தயாராகி கை கட்டி நின்று கொண்டிருக்கிறார் எடப்பாடி பழனிசாமி. அவர்களின் his master's voice ஆக ஒலிக்கக்கூடிய எடப்பாடி சொல்லிட்டார், 'பெண்களுக்கான மசோதாவை கொண்டு வந்தாங்க. அதை இவர்களெல்லாம் சேர்ந்து தோக்கடிச்சுட்டாங்க' என்று.

பெண்களுக்கான மசோதாவை கொண்டு வாருங்கள், இப்பொழுதே கொண்டு வாருங்கள். திராவிட முன்னேற்றக் கழகம் அதை ஏற்கும். பெண்களுக்காக வாக்களிக்கும். ஆனால் தமிழ்நாட்டு உரிமைகளைப் பறித்து தமிழர்களை ஏமாற்றி அதைக் கொண்டு வர நினைத்தால் என்றும் தமிழ்நாட்டின் பெண்களாக இருக்கட்டும், ஆண்களாக இருக்கட்டும். தொடர்ந்து எதிர்ப்போம் எதிர்ப்போம் அதை முறியடித்துக் காட்டுவோம்.

### சொல்வதை செயல்படுத்துபவர் நமது முதல்வர்!

மக்களுக்கு தந்திருக்கக்கூடிய அத்தனை வாக்குறுதிகளையும் நிறைவேற்றித் தந்திருக்கக்கூடிய தலைவர் நம்முடைய முதலமைச்சர் அண்ணன் தளபதி. ஆயிரம் ரூபாய் மகளிருக்கு உரிமைத் தொகை தருகிறேன் என சொன்னார். தந்தாரா? ஒரு கோடியே 31 லட்சம் பெண்கள் அதை வாங்ககிக் கொண்டிருக்கிறார்கள். அடுத்து ஆட்சி ஒரு மாசத்துல வந்துவிடும். வந்த உடனே 2000 ரூபாய் வழங்கப்படும். புதுமைப் பெண் திட்டத்தில் இப்போது 1000 வழங்குகிறோம். அது 1,500 ஆக உயர்த்தப்படும். நீங்கள ஆவலோடு எதிர்பார்க்கும் 8ஆயிரம் ரூபாய் கூப்பன் வழங்கப்படும். உங்கள் வீட்டுக்கு என்ன வாங்கலாம் என நீங்களே முடிவெடுக்கும் உரிமையை முதல்வர் வழங்கியிருக்கிறார். சொல்வதை செய்யக் கூடியவர்தான் நமது முதலமைச்சர்.

இந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மக்களுக்காக விருதாச்சலம் தொகுதியிலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பெரியார் நகர் முதல் புதுக்கூரை பேட்டை வரை போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் ரூ.15 கோடி மதிப்பில மேம்பாலம் அமைத்துத் தந்திருக்கிறார்கள். மணவாளநல்லூர் மணிமுத்தாரின் குறிக்கே ரூ.25 கோடி செலவில் தடுப்பணை கட்டப்பட்டுள்ளது. ரூ.5 கோடியில் அரசு மருத்துவமனை புதிய கட்டடம் கட்டி தரப்பட்டுள்ளது.

### புதிய நான்கு வழிச்சாலை அமைக்கப்படும்!

கடலூர் விருதாச்சலம் சேலம் நான்கு வழி தேசிய நெடுஞ்சாலை பணிகள் நடைபெற்று வருகின்றன. அடுத்த முறை ஆட்சிக்கு வந்தவுடன் விருதாச்சலம் பகுதியிலே புதிய பேருந்து நிலையம் அமைக்கப்படும். ராஜேந்திரபட்டினம் சோழபுரம் சாலை நான்கு வழி சாலையாக விரிவுபடுத்தப்படும்.

விருதாச்சலத்தில் பீங்கான் தொழில் வளர்ச்சிக்காக ஒரு பொது வசதி மையம் அமைக்கப்படும். இதையெல்லாம் செய்து தருவதற்கு எங்களுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பை நீங்கள் வழங்க வேண்டும்.

இங்கே இருக்கக்கூடிய சகோதரிகளுக்கு உண்மையிலேயே உரிமைகளை வழங்குவதற்கு, எதிர்காலம் இன்னும் சிறப்பாக இருப்பதற்கு நம்முடைய பிள்ளைகள் அவர்களுடைய எதிர்காலம் சிறப்பாக இருப்பதற்கு தமிழ்நாட்டுடைய மாநில உரிமைகளுக்காக;g போராடுவதற்கு தமிழ் என்ற நம்முடைய உயிர் போன்ற மொழியை பாதுகாப்பதற்கு நம்முடைய பிள்ளைகளுடைய எதிர்காலத்தை பாதுகாப்பதற்கு நாம் நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய கரங்களை பலப்படுத்த வேண்டும் என்று உங்களை எல்லாம் வேண்டி கேட்டுக்கொள்கிறேன்".

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. பரப்புரையாற்றினார்.